


முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (10.8.2023) சென்னையில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை சார்பில் நடைபெற்ற ”உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2024க்கான முன்னோட்ட அறிமுக விழாவின்போது, 2024 ஜனவரி 7 மற்றும் 8 தேதிகளில் சென்னையில் நடைபெறவுள்ள இம்மாநாட்டிற்கான இலச்சினையை (Logo) வெளியிட்டார். இந்த நிகழ்ச்சியில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் ச. கிருஷ்ணன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறைச் செயலாளரும், உலக முதலீட்டாளர்கள் மாநாட்டின் சிறப்புப் பணி அலுவலருமான அருண் ராய், வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமை செயல் அலுவலர் வே.விஷ்ணு, இந்திய தொழிற் கூட்டமைப்பின் தலைவர் ஆர். தினேஷ், தொழில் நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் தலைமை நிர்வாகிகள், தொழிற்கூட்டமைப்பின் நிர்வாகிகள், பல்வேறு நாடுகளின் தூதரக அதிகாரிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

### ஜனவரி 7, 8 தேதிகளில் நடைபெறும்

# ‘தமிழ்நாடு - உலக முதலீட்டாளர்கள் மாநாடு - 2024’-க்கான இலச்சினை!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார்!

சென்னை, ஆக.12–

“தமிழ்நாடு உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2024”க்கான முன்னோட்ட அறிமுக விழாவின்போது, மாநாட்டிற்கான இலச்சினையை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (10.8.2023) சென்னையில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை சார்பில் நடைபெற்ற ‘‘உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2024’’க்கான முன்னோட்ட அறிமுக விழாவின்போது, 2024 ஜனவரி 7 மற்றும் 8 தேதிகளில் சென்னையில் நடைபெறவுள்ள இம்மாநாட்டிற்கான இலச்சினையை (Logo) வெளியிட்டார்.

கடந்த இரண்டு ஆண்டுகளில், தொழில் வளர்ச்சியிலும், பொருளாதாரத்திலும் முன்னணி மாநிலமாக தமிழ்நாடு உருவெடுத்துள்ளது.

சமீபத்தில், நிதி ஆயோக் வெளியிட்ட ஏற்றுமதி தயார்நிலை குறியீடு தரவரிசைகளின்படி, 80.89 புள்ளிகளுடன் அகில இந்திய அளவில் முதல் இடத்தை பெற்றுள்ள தமிழ்நாடு, மின்னணுவியல் ஏற்றுமதியிலும் முதல் இடத்தில் உள்ளது.

மேலும், அதிக எண்ணிக்கையில் தொழிற்சாலைகள் மற்றும் பணியாளர்களை கொண்ட மாநிலங்களில் முதலிடத்திலும், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கையில், அகில இந்திய அளவில், இரண்டாவது இடத்திலும் உள்ளது. கடந்த ஆண்டு ஒன்றிய அரசு வெளியிட்ட அறிக்கையின்படி, இந்தியாவில் தொழில் புரிவதற்கு சிறந்த மாநிலங்களுள் ஒன்றாகவும் தமிழ்நாடு விளங்கி வருகிறது. மேலும், ஏற்றுமதித் தொழில்களுக்கான தயார்நிலைக் குறியீட்டில் நாட்டிலேயே முதல் மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது.

எனவேதான், பல பன்னாட்டு நிறுவனங்கள் தங்கள் புதிய, விரிவாக்க, பல்முனைப்படுத்தப்படவுள்ள மற்றும் மதிப்புக் கூட்டு திட்டங்களுக்காக, தமிழ்நாட்டைத் தேர்ந்தெடுத்து வருகின்றன. மாநிலத்தில் தொடங்கப்பட்ட புத்தொழில்களும், நன்கு வளர்ச்சி பெரும் சிறந்த சூழலமைப்பும் தமிழ்நாட்டில் நிலவுகின்றது.

இந்தியாவிலேயே இரண்டாவது பெரிய பொருளாதார மாநிலமாக விளங்கிவரும் தமிழ்நாட்டினை, 2030ஆம் ஆண்டிற்குள் ஒரு ட்ரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரமாக உயர்த்திட வேண்டும் என்று முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஒரு உயரிய இலக்கினை நிர்ணயித்துள்ளார். இந்த இலக்கினை விரைவில் அடைவதற்காக தமிழ்நாடு அரசின் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை, உயர் தொழில்நுட்பம் சார்ந்த தொழில் முதலீடுகளை ஈர்த்திடுவது மட்டுமல்லாமல், பெருமளவில் வேலை வாய்ப்பு அளித்திடும் தொழில் முதலீடுகளையும் ஈர்த்திட முயற்சிகள் மேற்கொண்டு வருகிறது.

இதன் பலனாக, இவ்வரசு பொறுப்பேற்றது முதல் இதுநாள் வரை, 4,15,282 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் ரூ.2,97,196 கோடி மதிப்பிலான 241 முதலீடுகள் உறுதி செய்யப்பட்டுள்ளன. மேலும் சில திட்டங்களுக்கு அமைச்சரவை ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையை, மேலும் மேம்படுத்திடும் வகையில், சென்னையில் 2024 ஆம் ஆண்டு ஜனவரி 7 மற்றும் 8 ஆகிய தேதிகளில், உலக முதலீட்டாளர்கள் மாநாட்டினை சிறப்பான முறையில் நடத்தி, பெருமளவிலான முதலீட்டினை ஈர்ப்பதற்கான நடவடிக்கைகளை தமிழ்நாடு அரசு மேற்கொண்டு வருகிறது.

அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியை நோக்கமாகக் கொண்டுள்ள தமிழ்நாடு அரசு, அனைத்து மாவட்டங்களை சார்ந்த தொழிலதிபர்கள், சிறு, குறு, மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள், வர்த்தக அமைப்புகள், விவசாயிகள், நெசவாளர்கள், கைவினைஞர்கள் உள்ளிட்டோரை ஒருங்கிணைத்து இந்த மாநாட்டினை நிகழ்த்தவுள்ளது.

அவ்வமயம், தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு தொழில்துறைகளை சார்ந்தவர்களும், மாவட்ட ஆட்சியர்கள் தலைமையில் இந்த நிகழ்வை காணும் வகையில் நேரடி ஒளிபரப்பு செய்வதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. ”தமிழ்நாடு உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2024” க்கான பிரத்யேக இணையதளம் விரைவில் அறிமுகப்படுத்தப்படும்.

உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2024 கருப்பொருள் “மீள்திறனுடன், நீடித்து நிலைக்கத்தக்க மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியை நோக்கி”

‘‘மீள்திறனுடன், நீடித்து நிலைக்கத்தக்க மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி” என்பது சென்னையில் நடைபெறவுள்ள உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2024ன் முக்கிய கருப்பொருளாகும். அதாவது, மாநிலம் முழுவதற்குமான, அனைவரின் வளர்ச்சியையும் உள்ளடக்கிய நோக்கங்களைக் கொண்டு இம்மாநாடு நடத்தப்படவுள்ளது.

### மாநாட்டிற்கான இலச்சினை வெளியீடு!

2024ஆம் ஆண்டு ஜனவரி 7 மற்றும் 8 ஆகிய தேதிகளில் சென்னையில் நடைபெறவுள்ள உலக முதலீட்டாளர்கள் மாநாட்டினை உலகிற்கு அறிமுகப்படுத்தும் முன்னோட்டமாக இன்றைய தினம் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாநாட்டிற்கான இலச்சினையை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டார்.

### இலச்சினை விளக்கம்!

”தமிழ்நாடு உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2024”ன் இலச்சினையில் தமிழ், தமிழர் மற்றும் தமிழ்நாடு ஆகியவற்றை குறிக்கும் விதமாக தமிழ் எழுத்தான ‘த’ வடிவில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

மேலும், கணினிமயமாக்கல் மற்றும் தொழில்மயமாக்கம், நகரமயமாக்கப்பட்ட சமூகம் மற்றும் அதிவேக தொழில் வளர்ச்சி ஆகியவற்றைக் குறிக்கும் வண்ணங்களுடன், அழகியல் கூறுகளை ஒருங்கிணைக்கும் வகையில், இந்த இலச்சினை உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சியில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் ச. கிருஷ்ணன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறைச் செயலாளரும், உலக முதலீட்டாளர்கள் மாநாட்டின் சிறப்புப் பணி அலுவலருமான அருண் ராய், வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமை செயல் அலுவலர் வே.விஷ்ணு, இந்திய தொழிற் கூட்டமைப்பின் தலைவர் ஆர். தினேஷ், பல்வேறு நாடுகளின் தூதரக அதிகாரிகள், தொழில் நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் தலைமை நிர்வாகிகள், தொழிற்கூட்டமைப்பின் நிர்வாகிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



புதுடெல்லியில் ஒன்றிய ரயில்வே அமைச்சர் அஸ்வின் வைண்னவ் அவர்களை நாடாளுமன்ற மக்களவை கழகக் குழு துணைத் தலைவர் கனிமொழி கருணாநிதி சந்தித்து, மதுரை தூத்துக்குடி இடையிலான 143.5 கி.மீ. தொலைவு இரண்டாவது ரயில்பாதை பணிகளை நிறுத்தாமல், தேவையான நிதி ஒதுக்கித் திட்டத்தை விரைந்து செயல்படுத்தக் கோரி மனு அளித்தார்.

### நாடாளுமன்றத்துக்கு


# மோடி வந்தால் என்ன ஆகிவிடும்?

## மல்லிகார்ஜுன் கார்கே பேச்சு!

புதுடெல்லி, ஆக. 12-

மணிப்பூர் குறித்து பேச மாநிலங்களவைக்கு பிரதமர் வர வேண்டும். அவர் ஒன்றும் கடவுள் இல்லை என மல்லிகார்ஜுன கார்கே விமர்சித்தார். மணிப்பூர் கலவரம் தொடர்பாக,விதி எண் 267ன் கீழ் மாநிலங்களவையில் விவாதம் நடத்த வேண்டும் என எதிர்க்கட்சிகள் கோரிக்கை விடுத்து வருகின்றன.அந்த விதிபடி பிரதமர் மோடி அவைக்கு வந்து,பதில் அளிக்க வேண்டும். ஆனால் இது குறித்து விதி எண் 176ன் கீழ் குறுகிய விவாதம் நடத்த தயார் என ஒன்றிய அரசு அறிவித்தது. இதில் வாக்கெடுப்போ அல்லது விவாதத்துக்கு அமைச்சர் யாராவது பதில் அளிப்பதற்கான அத்தியாவசியம் ஏற்படாது.

இந்நிலையில், நேற்று முன்தினம் காலை மாநிலங்களவையில் எதிர்க்கட்சி தலைவர் மல்லிகார்ஜுன கார்கே எழுந்து “விதி எண் 167ன் கீழ் பிரதமர் முன்னிலையில் மணிப்பூர் விவகாரம் குறித்து விவாதம் நடத்த வேண்டும்” என்றார். அதற்கு ஆளும் கட்சி எம்.பி.க்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். அதற்கு மல்லிகார்ஜுன கார்கே,“ பிரதமர் மோடி அவைக்கு வந்தால் என்ன ஆகிவிடும். அவர் ஒன்றும் கடவுள் இல்லை” என்றார். இதையடுத்து ஆளும் கட்சி எம்.பி.க்கள் கடும் அமளியில் ஈடுபட்டனர். இதனால் அவையை மதியம் 2 மணி வரை மாநிலங்களவை தலைவர் ஜெகதீப் தன்கர் ஒத்திவைத்தார்.



மதியம் 2 மணிக்கு அவை மீண்டும் கூடிய போது, “வேறு ஒரு விதியின் கீழ் இந்த விவகாரம் குறித்து பேசுவதற்கு அவையில் ஒருமித்த கருத்தை ஏற்படுத்த ஜெகதீப் தன்கர் முயற்சித்தார். ஆனால் ஆளும் கட்சி உறுப்பினர்களும், எதிர்க்கட்சி உறுப்பினர்களும் மாறி மாறி கருத்துகளை தெரிவித்ததால் எந்த ஒரு தீர்வும் ஏற்படவில்லை. அதன் பிறகு மிசோரத்தைச் சேர்ந்த ஒரு எம்.பி. எழுந்து,“பழங்குடியினர் மியான்மரில் இருந்து வரவில்லை என்றும் பிரிட்டிஷார் வருவதற்கு முன்னரே தான் உட்பட பழங்குடியினர் இந்தியாவில் வசித்து வருகின்றனர்” என தெரிவித்தார்.

ஆனால் அவர் பேசுவதற்கு அவை தலைவர் அனுமதி மறுத்தார். அவருக்கு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஆதரவளித்தனர். சிலர் அவையின் மையப்பகுதியை நோக்கி ஓடி வந்தனர். இதனால் அமளி ஏற்பட்டது. இந்த சமயத்தில், பார் மஸிண(திருத்த) மசோதா 2023 அவையில் கொண்டு வரப்பட்டு அமளிக்கிடையே நிறை வேற்றப்பட்டது. எதிர்க்கட்சி எம்.பி.க்கள் தொடர்ந்து அமளியில் ஈடுபட்டதால் அவை நாள் முழுவதும் ஒத்திவைத்து ஜெகதீப் தன்கர் உத்தரவிட்டார்.

### ராகுல் காந்தியின் நாடாளுமன்ற உரையிலிருந்து

# 24 வார்த்தைகளை நீக்கியது மோடி அரசு!

புதுதில்லி, ஆக. 12-

காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி, ஒன்றிய அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் மீது புதனன்று நடைபெற்ற விவாதத்தில் பேசினார். அப்போது, மணிப்பூரில் நடந்து வரும் வன்முறைகள் குறித்து மவுனமாக இருப்பதற்காக, பிரதமர் மோடி மீது, கடுமையான தாக்குதலை ராகுல் காந்தி தொடுத்தார்.

“மணிப்பூரில் இந்தியாவைக் கொலை செய்தவர்கள் பா.ஜ.க.வினர்” என்றும், “அவர்கள் (பாஜக வினர்) தேசபற்றாளர்கள் அல்ல; தேச விரோதிகள்” என்றும் குற்றம் சாட்டினார். இந்நிலையில், மக்களவை பதிவுகளில், மோடியை சரமாரியாகத் தாக்கும் ராகுல் காந்தி உரையின் சில பகுதிகளை ஒன்றிய அரசு நீக்கியுள்ளது.

சபாநாயகர் ஓம் பிரகாஷ் பிர்லா வின் இரண்டு மறைமுகக் குறிப்பு கள் உட்பட மொத்தம் 24 வார்த்தை கள், ராகுல் காந்தியின் உரையிலிருந்து நீக்கப்பட்டுள்ளன.

“முந்தைய கூட்டத்தொடரின் போது, நான் அதானியைக் குறிப்பிட்டுப் பேசியதால், உங்கள் மூத்த தலைவர் (பிரதமர் மோடி) வலிக்கு உள்ளாகியிருப்பார்” என்று ராகுல் காந்தி கூறினார். அத்துடன், “அவரது (பிரதமர் மோடியின்) வலி, உங்கள் (சபாநாயகர்) மீதும் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கும்” என்றும் ராகுல் காந்தி குறிப்பிட்டிருந்தார்.

சபாநாயகர் ஓம் பிர்லாவைப் பற்றிய இந்த இரண்டு வெளிப் படையான குறிப்புகளும் மக்களவை அவைக் குறிப்புகளிலிருந்து நீக்கப்பட்டுள்ளன. மேலும், மணிப்பூரில் மோடி இந்தியாவை ‘கொலை’ செய்துவிட்டார் என்று குறிப்பிட்ட இடங்களிலும், ‘ஹத்யா’ (கொலை), ‘கட்ல்’ (கொலை) மற்றும் ‘கொலை’ ஆகிய வார்த்தைகளும் நீக்கப்பட்டுள்ளன. “நீங்கள் அந்தக் (இந்தியாவின்) குரலைக் கொன்று விட்டதன் மூலம், மணிப்பூரில் பாரத மாதாவை கொன்று விட்டீர்கள் என்று அர்த்தம்; மணிப்பூர் மக்களை கொன்ற தன் மூலம் இந்தியாவை கொன்று விட்டீர்கள்.. என ராகுல் காந்தி சாடியிருந்த நிலையில், ‘தேசத்து ரோகி ’, ‘ஹத்யாரே (கொலை யாளி)’, ‘மாரா (கொல்லப்பட்டார்)’ ஆகிய வார்த்தைகளும் நீக்கப்பட்டுள்ளன.

# சிறுதொழில் நிறுவனங்களுக்கென தனிப்பிரிவு உருவாக்கப்படுமா?

## மக்களவையில் தயாநிதி மாறன் கேள்வி!

புதுடெல்லி, ஆக.12-

சிறுதொழில் நிறுவனங்களுக்கான தனிப்பிரிவு உருவாக்கப்படுமா? குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் பெரிய நிறுவனங்களுடன் போட்டியிடும் வகையில் ஒன்றிய அரசு வகுத்துள்ள சிறப்புக் கொள்கைகள் மற்றும் ஆதரவு வழிமுறைகள் என்ன என்பன போன்ற பல்வேறு கேள்விகளை ஒன்றிய குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சகத்திடம் நாடாளுமன்றத்தில் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் எழுப்பினார்.

அதன் விவரங்கள் வருமாறு:-

குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சகத்தின்கீழ் சிறுதொழில் நிறுவனங்களுக்கான தனிப்பிரிவை உருவாக்கும் வகையில் ஏதேனும் முன்மொழிவு அல்லது திட்டங்கள் உள்ளனவா என கேள்வி எழுப்பினார்.

அவ்வாறெனில் சிறுதொழில் நிறுவனங்களுக்கு தேவையான கடன் வசதி, தொழில்நுட்ப வசதி, சந்தைப்படுத்துதல், வணிக மேம்பாட்டு வாய்ப்புகள் போன்றவற்றிற்கு இந்த தனிப் பிரிவு எந்த வகையில் உதவப் போகிறது என கேள்வி எழுப்பினார்.

புதிய சிறுதொழில் நிறுவனங்களை தொடங்குவதற்கு நிதி உதவி வழங்கும் பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (PMEGP) போன்ற அரசுத் திட்டங்களை பயன்படுத்திக் கொள்ள இந்த தனிப்பிரிவு உதவுமா என்றும் அவ்வாறெனில் அதன் விவரங்களைத் தெரியப்படுத்தவும் என கேள்வி எழுப்பினார்.



குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் தங்கள் தொழிலை விரிவுபடுத்துவதற்கும் பெரிய நிறுவனங்களுடன் போட்டியிடுவதற்கும் ஏதுவாக ஒன்றிய அரசு வகுத்துள்ள சிறப்பு கொள்கைகள் மற்றும் ஆதரவு வழிமுறைகள் என்ன என கேள்வி எழுப்பினார்.

நமது நாட்டின் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் வளர்ச்சிக்கான காலக்கெடு என்ன என்று கேள்வி எழுப்பினார். நாட்டின் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் வளர்ச்சியடையவும், வெற்றியடையவும் பல்வேறு தொழில் முனைவோர்களின் ஒருங்கிணைப்பு மற்றும் ஒத்துழைப்பை உறுதி செய்ய மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் என்ன என கேள்வி எழுப்பினார்.

### சிறைத்துறை டி.ஜி.பி. அமரேஷ் பூஜாரி தலைமையில் - நாட்டிலேயே முதன் முதலாக

# பெண் சிறைவாசிகளால் நடத்தப்படும் பெட்ரோல் நிலையம்!

## புழலில் அமைச்சர் எஸ்.ரகுபதி திறந்து வைத்தார்!

சென்னை, ஆக.12-

இந்திய சிறைகளில் முதல் முறையாக முழுவதும் பெண் சிறைவாசிகளால் நிர்வகிக்கப்படும் வகையில் புழல், அம்பத்தூர் சாலையில், புழல் பெண்கள் தனிச்சிறை அருகில் புதிதாக கட்டப்பட்ட “ப்ரீடம் பெட்ரோல் விற்பனை நிலைய” (Freedom Filling Station)த்தை நேற்று முன்தினம் (10.08.2023) சட்டம், நீதி, சிறைகள் மற்றும் சீர்திரு த்தப்பணிகள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி திறந்து வைத்தார்.

இப்பெட்ரோல் விற்பனை நிலையத்தில் 30 பெண் சிறைவாசிகள் பணிபுரியவுள்ளனர். இவர்கள் மாத ஊதியமாக தலா ரூ.6,000 பெறுவார்கள்,

இந்த திறப்பு விழாவில் மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.சுதர்சனம், சிறைகள் மற்றும் சீர்திருத்தப்பணிகள் துறை தலைமை இயக்குநர் அமரேஷ் புஜாரி, ஐ.ஒ.சி. எல். நிர்வாக இயக்குனர் மற்றும் மாநில தலைவர். தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி, வி.சி. அசோகன், சிறைத்துறைத் துணைத்தலைவர் (தலைமையிடம்) இரா.கனகராஜ், சென்னை சரக சிறைத்துறைத் துணைத்தலைவர் ஆ.முருகேசன், புழல், மத்திய சிறை1 கண்காணிப்பாளர் திருமதி. நிகிலா நாகேந்திரன், புழல், மத்திய சிறை கண்காணிப்பாளர் கிருஷ்ணராஜ். ஐ.ஒ.சி. எல். அலுவலர்களான மாநில சில்லறை வணிகத் தலைவர் பி.கே.ராஜேந்திரா. மாநில சில்லறை வணிகத் தலைவர் II விபின் ஆஸ்டின், மாநிலப் தலைமை தி.க.இளமாறன், சென்னை மண்டல சில்லறை பொறியாளர் வணிக மேலாளர் டி.முத்துக்குமரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

தமிழ்நாடு சிறைத்துறையால் நிர்வகிக்கப்படும் பெட்ரோல் சில்லறை விற்பனை நிலையங்கள் பொதுமக்களிடையே மிகச்சிறப்பான வரவேற்பை பெற்றுள்ளது. தமிழ்நாடு சிறைத்துறையால் நடத்தப்படும் பெட்ரோல் சில்லறை விற்பனை நிலையத்தில் விற்பனை செய்யப்படும் பெட்ரோல்/டீசலின் தரம் மற்றும் கண்ணியமான சேவைகளால் தாங்கள் மிகவும் மகிழ்ச்சி அடைவதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

இது தவிர மாநிலத்தில் 5 இடங்களில் சிறைத்துறை சார்பில் பெட்ரோல் பங்க் நடத்த அனுமதி பெறப்பட்டு விரைவில் அவைகள் திறக்கப் பட உள்ளதாக சிறைத்துறை டி.ஜி.பி. அமரேஷ் பூஜாரி தெரிவித்தார்.

### ‘வாட்ஸ் அப்’பில் வந்த செய்தி!

